திரு. த. பழனி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. அந்த 2 மாத காலம் நீட்டிக்கப்படாமல் அந்த இரண்டு மாத காலத்திற்குள்ளாக ரிசர்வ் வங்கியினுடைய அனுமதி பெற்று ஆற்காடு நகரத்திலே நகர வங்கியை அமைப்பதற்குண்டான அனைத்து நடவடிக்கைகளையும் அமைச்சர் அவர்கள் எடுப்பாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேகமான நடவடிக்கை நிச்சயமாக எடுக்கப்படும்.

திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தொகுதியிலே பெண்களுக்காக ஒரு வங்கி ஆரம்பிக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டு இருக்கிறார்கள். அது ஆரம்பிக்கின்ற நிலை இருக்கிறது என்பதை நான் அறிகிறேன். அதை விரைவில் ஆரம்பிக்க அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுத்து நாள் குறிப்பிடுவாரா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்களுக்கான அந்த தனி வங்கியை உடனடியாக ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள்.

கு.கா.வி. எண் 13—(*வினா எண் 9251)—திரு. செ. செம்மலை : மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தற்போதுள்ள காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களில் பலவற்றில் அதிகாரிகளே தலைவர் பொறுப்புக்களில் இருப்பது அரசின் கவனத்திற்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், எத்தனை சங்கங்களில் இருக்கிறார்கள்?

(இ) நிர்வாகப் பொறுப்பை மாற்றி அமைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:

(அ) அரசின் கவனத்திற்கு வந்துள்ளது.

(ஆ) தற்சமயம் தமிழ்நாட்டில் செயல்பட்டு வரும் 507 சங்கங்களில், 120 சங்கங்களில் மட்டும் ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் தலைவர்களாக இருந்து வருகின்றனர்.

(இ) ஊராட்சி ஒன்றிய ஆணையர்கள் தலைவர்களாக இருக்கும் சங்கங்களில் அலுவல் சார்பற்றவர்களைத் தலைவர்களாக நியமனம் செய்வது பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது.

திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டங்களில் அதிகமாக இப்படி அதிகாரிகள் இந்தச் சங்கங்களுடைய பொறுப்பாளர்களாக இருக்கிறார்கள். பரிசீலனையில் இருக்கிற இந்த நோக்கத்தை செயல்படுத்துகிற வகையில் அமைச்சர் அவர்கள் உடனடியாக அந்தச் சங்கங்களுடைய பொறுப்புகளை மக்கள் பிரதிநிதிகளிடத்திலே ஒப்படைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட ஆற்காடு மாவட்டம், தென் ஆற்காடு மாவட்டம், தஞ்சாவூர் மாவட்டம் ஆகிய மூன்று மாவட்டங்களிலே மிக அதிகமாக அரசு அலுவலர்கள் தலைவர்களாக இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய இந்த உணர்வைப் புரிந்துகொண்டு உடனடியாக அந்தச் சங்கங்களிலெல்லாம் பொது மக்களுடைய பிரதிநிதிகளை நியமிப்பதற்கு அரசு வேகமாக நடவடிக்கை எடுக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உடுக்குறியிட்ட வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

1—

காந்தி நகர் பேரூராட்சி வடிகால் வசதித் திட்டம்.

வினா 2143—திரு. கோ. இரகுபதி : மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காட்பாடி தொகுதி, காந்திநகர் பேரூராட்சியில் வடிகால் வசதி செய்யும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது செயல்படுத்தப்படும்?

விடை—

(அ) மற்றும் (ஆ): காட்பாடி தொகுதி, காந்திநகர் பேரூராட்சிக்கு வடிகால் வசதி அமைக்கும் திட்டம் இல்லை.